


பாஸ்க் தேசம் என்று சொல்லப்படுகிற, ஸ்பெயினின் ஆளுகைக்கு உட்பட்ட மாபெரும் நிலப்பரப்பின் அதி முக்கிய மாவட்டமான கிபுஸ்கோவா (Gipuzkoa) வின் தலைநகரம், சான் செபாஸ்டியான். பாஸ்க் மாகாணத்தின் வடக்குப் பகுதியில் பிஸ்கே வளைகுடாவை ஒட்டி அமைந்திருக்கிற அதி அற்புதமான நகரம். கிட்டத்தட்ட இரண்டு லட்சம் ஜனத்தொகை. இருக்கிற இயற்கையைக் கண்ணாலும் நெஞ்சாலும் பருகிப் பருகிக் கிரங்கிக் கிடக்கிற மக்கள். தப்பித்தவறிக் கடற்கரைப் பக்கம் போய்விட்டால் கந்தர்வ லோகமோ என்கிற சந்தேகம் வந்துவிடும். சூரியக் குளியலில் ஆண்களும் பெண்களும் அமோகமாக ஈடுபட்டிருப்பார்கள் எப்போதும். பக்கத்தில் போய் ஹலோ சொன்னாலும் திரும்பிப் பார்க்கமாட்டார்கள். உல்லாசத்துக்குப் பெயர் போன பிராந்தியம். வருஷம் முழுக்க டூரிஸ்டுகள் வருவார்கள். ஹோட்டல்களில் சொல்லி வைத்துத்தான் அறை பிடிக்கவேண்டும். விலைவாசி கொஞ்சம் அதிகமாக இருக்கும்.

பாஸ்க் மொழிப் போராட்டம், இ.டி.ஏ., தனி தேசம் உள்ளிட்ட நூற்றாண்டுகால விஷயமெல்லாம் சமகால மக்களை அவ்வளவாகத் தொடவில்லை அங்கே. வருஷம் முழுக்க நாயாய் பேயாய் உழைத்துச் சம்பாதிக்க வேண்டியது. ஒரு மாசம், ரெண்டு மாசம் லீவு போட்டுவிட்டு சான் செபாஸ்டியனுக்கு வந்து கடற்கரையே கதி என்று கிடக்க வேண்டியது.

பாஸ்க் மாகாணத்தின் மற்ற பகுதிகளில் அவ்வப்போது புரட்சி வாசனை தலை தூக்கினாலும், சான் செபாஸ்டியான் எப்போதும் சொர்க்கபுரிதான். சுற்றுலாத் தலம் என்கிறபடியால், வருமானம் கெடாமல் இருப்பதன் பொருட்டு, அரசும் அங்கே நல்ல பல பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து வைத்திருக்கிறது.

அது ஒருபக்கம் இருக்க, மேற்படி ஊருக்குத்தான் மன்னர் ஜான் கார்லோஸ் வருவதற்கு இருந்தார். பார்த்தோமே, மீன் பண்ணைத் திறப்பு விழா.

ஒரு மன்னர் என்னத்துக்காக மீன் பண்ணையையெல்லாம் திறந்து வைக்க வேண்டும் என்று கேட்டுவிடக் கூடாது. ஜான் கார்லோஸ் காட்சிக்கு எளியர். யார் எங்கே கூப்பிட்டாலும் மறுக்காமல் ஒப்புக் கொள்வார். வாழ்வது என்பதே மக்களின் சந்தோஷத்துக்குத் தானே? ஒரு முனியாண்டி விலாஸ் திறந்து வைக்கக் கூப்பிட்டாலும் அவசியம் ஒப்புக் கொள்வார். முன்னதாக ஆறு மாத அவகாசத்துடன் அனுமதி கேட்டு முறைப்படி விண்ணப்பித்திருக்க வேண்டும். மன்னர் வருவதற்குத் தோதான பாதுகாப்பு வசதிகள் அங்கே இருக்கின்றன என்று காவல் துறையும் உளவுத்துறையும் அறிக்கை சமர்ப்பித்தாகவேண்டும். அது ஓ.கே. என்றால் இதுவும் ஓ.கே. எதுவும் ஓ.கே.

ஆக, மீன் பண்ணையைத் திறந்து வைக்க மன்னர் வருகிறார். இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் தீர்த்துக் கட்டிவிடுவது என்று முடிவு செய்தது இ.டி.ஏ.



உடனடியாக அந்த மீன் பண்ணை வளாகத்தைச் சுற்றித் தம் உளவு ஆள்களை அனுப்பி வைத்தார்கள். சாதாரண மக்களோடு மக்களாகக் கலந்து அவர்கள் இடத்தை வேவு பார்க்க ஆரம்பித்தார்கள். முன்னதாக, மன்னர் வருவதை ஒட்டி அரசு உளவர்கள் அங்கே முகாமிட்டிருப்பார்கள் என்கிற விவரம் தெரிந்திருந்தபடியால், மிகவும் கவனமாக நடந்து கொண்டார்கள். மீன் பண்ணை எங்கே இருக்கிறது, மன்னர் ரிப்பன் வெட்டிவிட்டு எங்கே போவார், எப்படிப் போவார், விழா மேடை எங்கே, எத்தனை படிக்கட்டுகள், மேடையில் யார் யார், கீழே எத்தனை பேர், செக்யூரிடி எப்படி என்று ஒவ்வொரு விஷயமாகப் பார்த்துப் பார்த்து, கேட்டுக் கேட்டுக் குறிப்பெடுத்துக் கொண்டார்கள்.

சம்பந்தப்பட்ட மீன் பண்ணை இருக்கிற இடத்துக்கு அருகே, தமது வழக்கப்படி வாடகைக்கு ஏதாவது இடம் கிடைக்குமா என்றும் பார்த்தார்கள். ம்ஹூம். மன்னர் வருகிற பாதையை அலசினார்கள். திரும்பிப் போகிற வழியில் ஏதும் சாத்தியம் உண்டா என்று பார்த்தார்கள்.

மறுபுறம் மன்னரை எப்படிக் கொல்வது என்றும் ஆலோசனை நிகழ்த்தப்பட்டது.

விழா மேடைக்கு குண்டு வைக்கலாம் என்று ஒரு யோசனை சொல்லப்பட்டது. அது சாத்தியமில்லை என்று உடனடியாக மறுத்துவிட்டார்கள். இருபத்தி நான்கு மணிநேரமும் பாதுகாப்பு அதிகாரிகளால் சூழப்பட்டிருக்கும் இடம். குண்டு என்று நினைப்பதே கஷ்டம்.

பத்து திசைகளில் பத்துப்பேரை நிறுத்தி, அவர்களுடைய கைகளில் தலா ஓர் இயந்திரத் துப்பாக்கியைக் கொடுத்து விடலாம் என்பது அடுத்த யோசனை.

ஆனால், துப்பாக்கிகளுடன் விழா கேந்திரத்துக்குச் செல்வதில் உள்ள அபாயம் ஆலோசிக்கப்பட்டது. அத்தனை சுலபமல்ல. ஸ்பெயின் மன்னரின் செக்யூரிடி என்பது, கிட்டத்தட்ட அமெரிக்க அதிபரின் செக்யூரிடிக்கு நிகரானது.

மனித வெடிகுண்டாக யாரையாவது அனுப்பலாம் என்றும் பேசினார்கள். இ.டி.ஏ.வில் அந்தக் கலாசாரம் கிடையாது. அகிலம் முழுவதும் பரவலாக அரங்கேற்றப்படுவதுதான் என்றாலும், திடீரென்று குறுகிய கால அவகாசத்தில் ஒரு மனித வெடிகுண்டைத் தயார் செய்வது அத்தனை சிலாக்கியமா என்று தயங்கினார்கள். தவிரவும் ஐரோப்பியத் தீவிரவாதிகளிடையே அத்தனை பெரிய ஆத்ம நிவேதன ஐடியாலஜியெல்லாம் கிடையாது. அதற்கெல்லாம் இலங்கையோ, பாலஸ்தீனோதான் சரி.

கார் குண்டுதான் இதற்கும் சரி என்று பல தலைகள் முடிவு சொன்னார்கள். ஒரு காரில் வேண்டிய மட்டும் வெடிபொருள் நிரப்பி விழா மேடைக்கு அருகே கொண்டுபோய் நிறுத்திவிடுவது. அல்லது விழா மேடை அருகே செல்லத்தக்க அரசு கார் ஒன்றில் குண்டு பார்சலைத் திணித்துவிடுவது. அதுவுமில்லாவிட்டால், திறக்கப்படவிருந்த மீன் பண்ணைக்குள்ளேயே குண்டு வைத்துவிடுவது.

என்னவாவது செய்தாக வேண்டும். கிழட்டு மகாராஜாவின் கோட் பாக்கெட்டில் வைக்க முடிந்தால் கூட உத்தமம். ஆனால், அதற்கான ஐடியா உடனடியாகத் தயாராக வேண்டும். என்ன செய்யலாம்?

விதவிதமாக விவாதித்தார்கள். இறுதியில், மன்னரின் கார் வரும் பாதையெங்கும் வரிசையாகப் போதிய இடைவெளியில் பத்திருபது பேரைத் துப்பாக்கியுடன் நிறுத்தி, ஒவ்வொருவரையும் குறிபார்க்கச் சொல்லலாம் என்று முடிவானது. கூட்டத்தோடு கூட்டமாகவும் சிலபேரைத்

துப்பாக்கியுடன் நிறுத்தலாம் என்று முடிவு செய்தார்கள். ஒருவன் தவறவிட்டால் இன்னொருவன். இன்னொருவன் தவறவிட்டால் வேறொருவன்.

இதில் ஒரே ஒரு பிரச்னை உண்டு. ஒருவன் முயற்சி செய்து, குறி தவறிவிட்டால் உடனே செக்யூரிடி அலர்ட் ஆகிவிடும். கலவரம் எழும். மன்னரைச் சுற்றி பாதுகாப்பு வளையம் ஏறிவிடும். அவரைத் தனிமைப்படுத்தி அழைத்துச் சென்று விடுவார்கள். ஆகவே, ஒரே சமயத்தில் அத்தனை பேரும் தாக்குதல் நிகழ்த்துவது பலன் தரலாம் என்று முடிவு செய்தார்கள்.

நூறடி இடைவெளியில், குறிப்பிட்ட நேரத்துக்கு வினாடி பிசகாமல் பதினைந்து பேர் தொடர்ந்து சுட்டுக்கொண்டே இருக்க வேண்டும். எப்படியும் மன்னர் மாட்டுவார். மற்ற சிலபேர் இறந்தாலும் பரவாயில்லை.

இதுதான் யோசனை. இதுதான் செயல்திட்டம். இனி ஆட்டத்தைத் தொடங்கலாம் என்று முடிவு செய்தார்கள். மன்னர் காரைவிட்டு இறங்கி, கண்ணில் தென்பட்ட கணத்திலிருந்து விடாமல் அத்தனை பேரும் சுட்டுக்கொண்டே இருக்கவேண்டும். அவர் இறந்து விழுந்தது உறுதியான பிறகு, தப்பிக்கும் முயற்சியில் ஈடுபடலாம்.

எப்படித் தப்பிப்பது? அதற்கும் யோசித்தார்கள். ஒரு குறிப்பிட்ட திட்டமும் தீட்டப்பட்டிருக்கிறது. ஆனால், வெளியே தெரியவரவில்லை. எப்படியாவது காரியத்தை முடித்துவிடுவது என்று உறுதியுடன் களத்தில் இறங்கினார்கள்.

ஆனால் விதி வேறு விதமாக இருந்தது!

ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். இ.டி.ஏவுக்கென்று சதியாலோசனை செய்ய ஆபீஸ் ஏதும் கிடையாது. அவர்கள் மக்களோடு மக்களாகப் புழங்குகிறவர்கள். திட்டங்களைப் படு ரகசியமாகவே வைத்திருப்பார்கள். கூடிப்பேசுகிற சந்தர்ப்பம் அதிகம் இருக்காது. பெரிய தலைகள் பிரான்சில் உட்கார்ந்து பேசி முடித்துவிடுவார்கள். தொண்டரடிப்பொடி ஆழ்வார்கள் இங்கே ஸ்பெயினில் கொடுத்த வேலையை முடிப்பதுடன் சரி. எனவே, ஆலோசனைகளுக்கு அவசியம் இராது.

ஆனால், இந்தக் குறிப்பிட்ட திட்டம், அதில் ஈடுபடுத்தப்பட்ட வீரர்களுக்கிடையே ஒருமாதிரியான பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. மிகப்பெரிய காரியம் அல்லவா? சாதித்தால் சரித்திரத்தில் பெயர் கிடைக்கும். சொதப்பினால் மன்னருக்கு பதில், தாம் பரலோகம் போகவேண்டி வரும். இரண்டே சாய்ஸ்தான். எனவே, ஒருவருக்கொருவர் திட்டம் குறித்து அவ்வப்போதாவது ஓரிரு வார்த்தைகள் பேசிக்கொள்ள விரும்பினார்கள்.

சம்பந்தப்பட்ட மீன் பண்ணை திறப்பு விழாவுக்கு இருபது நாள்கள் முன்னதாக, திட்டத்தில் தொடர்புடைய ஆறு இ.டி.ஏ. போராளிகள், தமக்குப் பரிச்சயமான ஒரு சிறு ஹோட்டலில் சந்தித்து, டீ குடித்தபடி ரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். பழக்கப்பட்ட டீக்கடைதான். வெளியாள் யாரும் அத்தனை சுலபத்தில் வந்துவிட மாட்டார்கள். அப்படியே வருகிறவர்களும் பாஸ்க் மக்களாகத்தான் இருப்பார்களே தவிர, ஸ்பானிஷ் பேசுபவர்களாக இருக்க முடியாது. பாஸ்க் மாகாணத்தில் இ.டி.ஏவைப் பிடிக்காதவர்கள் இருக்க முடியுமே தவிர, அவர்களைக் காட்டிக் கொடுக்கக்கூடியவர்களாக யாரும் இருக்கமுடியாது!

ஆகவே, அவர்கள் மன்னரைக் கொல்லும் திட்டம் குறித்துப் பேசினார்கள். என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும், யார் எங்கே பொசிஷன் எடுக்கவேண்டும். இன்னபிற.

ரகசியமாகத்தான் பேசினார்கள். முழுப்பேச்சும் யார் காதிலும் விழ வாய்ப்பில்லைதான். ஆனாலும் பக்கத்து டேபிளுக்கு அடுத்த டேபிளில் அமர்ந்து என்னவோ சாப்பிட்டுக்கொண்டிருந்த ஒரு வயதான நபரின் காதில் அரைகுறையாக அது விழுந்துவிட்டது. மன்னர். திட்டம். ஜாக்கிரதை.

கவனம். துப்பாக்கி. தப்பித்தல். சில சொற்கள். கொஞ்சம்தான். ஆனாலும் சேர்த்து வைத்து மாலை கட்டினால் பெரிய கதையாகிவிடும் போலல்லவா இருக்கிறது!

அவர் அதிர்ச்சியடைந்தார். அவரும் பாஸ்க் குடிமகன் தான். இ.டி.ஏ.வைத் தெரியும். அவர்கள் போராடுவது எதற்காக என்றும் தெரியும். நமக்கேன் வம்பு என்று உடனே பில்லுக்குப் பணம் கொடுத்துவிட்டு எழுந்து வெளியே போய்விட்டார்.

'அடியே மரகதம், விசயம் தெரியுமா? ஓட்டல்ல செல பசங்க பேசிக்கிட்டாங்கடி. இந்த மாதிரி சமாசாரமாம்.' – வீட்டுக்குப் போய் சகதர்மிணியிடம் கர்ம சிரத்தையாகக் கேட்டதைச் சொல்லியிருக்கிறார்.

அவளுக்கு பார்சிலோனாவில் ஒண்ணுவிட்ட தங்கச்சி ஒருத்தி இருந்திருக்கிறாள். தற்செயலாக அவள் அந்த நேரம் பார்த்து போன் செய்ய, அடுத்த பார்சலில் ஆவக்காய் ஊறுகாய் பாட்டில் ரெண்டு அனுப்பு என்று சொல்லிவிட்டு, கண் கண்ட தெய்வம் கணவன் சொன்ன தகவலை அவளிடம் போட்டு வைத்தாள். அந்த ஒண்ணுவிட்ட சகோதரியின் கணவன் ஒரு போலீஸ் உளவாளி. அது அவளுக்கே தெரியாது.

தீர்ந்தது விஷயம்.

இ.டி.ஏ. காத்திருந்தது. மீன் பண்ணை வடிவமைப்புப் பணிகள் ஜோராக முடிவடைந்துவிட்டன. அலங்கார ஏற்பாடுகள் ஆரம்பமாகிவிட்டன. ஊரெல்லாம் விழாக்கோலம். மன்னர் வருகிறார் என்றால் சும்மாவா? போலீஸ் கெடுபிடிகள் ஆரம்பித்துவிட்டன. உடைந்த ரோடுகளைப் பார்த்துப் பார்த்துச் செப்பனிட்டார்கள். கட்டடங்களுக்குச் சுண்ணாம்பு அடித்தார்கள். சுற்றுலா உல்லாசிகளை ஓட்டலுக்குள் மட்டும் தண்ணியடித்துக் கூத்தாடக் கேட்டுக்கொண்டார்கள். நகரப் பொறுக்கிகளைப் பொறுக்கி எடுத்துப் போய் தாற்காலிகமாக ஸ்டேஷன் அறைகளில் அடைத்துவைத்தார்கள்.

எல்லாம் ஜோராக நடந்தது. ஆனால், விழாவுக்கு ஒருநாள் முன்னதாக விழா கேன்சல் என்று அறிவித்து விட்டார்கள்.

சே போ என்றாகிவிட்டது இ.டி.ஏவுக்கு. எத்தனை கனவு! எத்தனை நாள் முயற்சி! பார்த்துப் பார்த்துத் தீட்டிய திட்டம். இப்படி பணாலாகிவிட்டதே என்று மூக்கால் அழுது தீர்த்தார்கள். திறப்பு விழாவை மூன்று மாதங்களுக்குத் தள்ளி வைத்துவிட்ட அறிவிப்பு பின்னால் வந்தது. காரணமும் மூன்று மாதங்கள் கழித்துத்தான் சொல்லப்பட்டது.

மன்னரைக் கொல்ல இ.டி.ஏ. திட்டம் தீட்டியிருந்த விஷயம் கேள்விப்பட்டோம். அதனால்தான்.

இ.டி.ஏ.வின் சரித்திரத்தில் மிகப்பெரிய ஏமாற்றம், மாபெரும் தோல்வி என்பது இதுதான். இந்தக் கடுப்பைத் தீர்த்துக்கொள்ள, தாமஸ் கேபரெல்லோ என்கிற 63 வயது கவுன்சிலர் ஒருவரைக் காரணமே இல்லாமல் கழுத்தில் சுட்டுக் கொன்றார்கள். அவருக்கும் மன்னருக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஆனால், மன்னரைக் கொல்ல முடியாததால் மன்னர் வயதில் ஒருவரைக் கொன்றோம் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்.